(iii) இலங்கையின் பட்டயக் கணக்காளர்களால் நடத்தப்படும் வணிக மட்டம் I மற்றும் II (அல்லது நிர்வாக நிலை அல்லது CAB I மற்றும் CAB II அல்லது அடிப்படை (Foundation) மற்றும் இடைநிலை (Intermediate) மட்டம் அல்லது உரிமம் (Licentiate) I மற்றும் II) ஐப் பூர்த்தி செய்திருத்தல்.
(iv) பட்டய முகாமைத்துவக் கணக்காளர்களின் (CIMA-UK) பகுதி I மற்றும் பகுதி II இனைப் பூர்த்தி செய்திருத்தல்.
(v) பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கத்தின் (ACCA-UK) பகுதி I மற்றும் பகுதி II இனைப் பூர்த்தி செய்திருத்தல்.
(vi) கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் (AAT) பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.
(vii) சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனம் (CMA – Sri Lanka) நடாத்தும் ACMA பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல்.

**குறிப்பு 2 : பொது நிருவாக சுற்றறிக்கை இல. 46/90 இன் படி, ஆட்சேர்ப்பு நோக்கங்களுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் கணக்கீடு பற்றிய உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, பொது வணிகமானி (சாதாரண தேர்ச்சி) பட்டத்திற்கு மாற்றுத் தகுதியாக கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா அங்கீகரிக்கப்பட்டுள்ளது.**

2. வியாபார நிர்வாகம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – (HNDBA) முழுநேரம் - 2 ½ ஆண்டுகள்.

3. வியாபார நிதி பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – (HNDBF) முழுநேரம் - 2 ½ ஆண்டுகள்.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் வணிகப் பிரிவில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி.

4. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDE - சிவில்) முழுநேரம் - 3 ½ ஆண்டுகள்.
5. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDE - மின்னியல் மற்றும் இலத்திரனியல்) : முழுநேரம் - 3 ½ ஆண்டுகள்.

6. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDE - இயந்திரவியல்) முழுநேரம் - 3 ½ ஆண்டுகள்.
7. தொகைக் கணக்கெடுப்பு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDQS) – முழு நேரம் - 2 ½ வருடங்கள்.
8. நிருமாண சேவைகள் பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDBSE) முழு நேரம் - 3 ½ ஆண்டுகள்.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பரீட்சை பௌதீக விஞ்ஞான பிரிவில் (இரசாயனவியல், பௌதீகவில் மற்றும் இணைந்த கணிதம்) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தியடைந்திருத்தல்

9. ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா (HND in English)

9.1 - முழு நேரம் - 2 ½ ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளைக்கொண்டிருக்க வேண்டும்.

(அ) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் எந்தவொரு துறையிலும் ஒரே அமர்வில் (பொது ஆங்கிலம் பிரதான மூன்று பாடங்களில் ஒன்றாகக் கருதப்படாது)

மற்றும்

(ஆ) க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் கணிதத்தில் சாதாரண சித்தியும் அடைந்திருத்தல்

அல்லது

க.பொ.த. (சா./த.) ஆங்கில இலக்கியப் பாடத்திலும் மற்றும் கணிதத்திலும் சாதாரண சித்தியடைந்திருத்தல்

9.2 - பகுதி நேரம் - 2 ½ ஆண்டுகள்

9.1 இல் உள்ள மேற்கூறிய தகைமைகளுடன், விண்ணப்பதாரர் அரச துறை/ பொது நிறுவனம்/ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது சுயதொழில் (தொழில் முனைவோர்) பணியில் ஈடுபடுபவராக இருக்க வேண்டும். நேர்காணலின் போது சட்டரீதியான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

10. உணவுத் தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDFT) முழு நேரம் - 2 ½ ஆண்டுகள்.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க.பொ.த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம் அல்லது பௌதிக விஞ்ஞானப் பாடப் பிரிவில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

க.பொ.த. (சா.த.) ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தியடைந்திருத்தல்

11. தகவல் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HNDIT)

11.1 முழுநேரம் - 2 ½ ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க.பொ.த. (உ. த.) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி.

மற்றும்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி.

11.2 பகுதி நேரம் - 2 ½ ஆண்டுகள்

11.1 இல் உள்ள மேற்கூறிய தகுதிகளுக்கு கூடுதலாக, விண்ணப்பதாரர் அரச நிறுவனம்/ பொது நிறுவனம்/ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது சுயதொழில் (தொழில் முனைவோர்) ஆகியவற்றில் தொடர்புடைய துறையில் பணியமர்த்தப்பட்டவராக இருக்க வேண்டும். நேர்காணலின் போது சட்டரீதியான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

12. முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – (HNDM)
முழு நேரம் - 3 ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி
மற்றும்
க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரண சித்தி
அல்லது
(ii) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தால் நடத்தப்படும் கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான தேசியச் சான்றிதழ் அல்லது வணிகக் கல்விக்கான தேசியச் சான்றிதழ் (பொது நிர்வாகம்/ சந்தைப்படுத்தல்)
மற்றும்
க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி.

13. செயற்றிட்ட முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – (HNDPM)
13.1 முழு நேரம் - 2 ½ ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

க. பொ. த. (உ./த.) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி
மற்றும்
க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

13.2 பகுதி நேரம் - 2 ½ ஆண்டுகள்

13.1 இல் உள்ள தகுதிகளுக்கு கூடுதலாக, விண்ணப்பதாரர் அரச நிறுவனம்/ பொது நிறுவகம்/ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது சுயதொழில் (தொழில் முனைவோர்) ஆகியவற்றில் தொடர்புடைய துறையில் பணியமர்த்தப்பட்டவராக இருக்க வேண்டும். நேர்காணலின் போது சட்டரீதியான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

14. தொழில்நுட்;பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (விவசாயம்) – (HNDT – (Agri.)
முழு நேரம் - 3 ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் ஒரே அமர்வில் சித்தி. (இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், உயிரியல் மற்றும் பௌதிகவியல் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக)
மற்றும்
க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி
அல்லது
(ii) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் முறைமைத் தொழில்நுட்பப் பிரிவில் உயிரியல் முறைமைத் தொழில்நுட்பம், தொழில்நுட்பத்திற்கான விவசாயம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக ஒரே அமர்வில் சித்தி
மற்றும்
க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

15. சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – (HNDTHM)
முழு நேரம் - 3 ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

க. பொ. த. (உ./த.) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி.

மற்றும்

க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

*பிரிவு "ஆ"*

**உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களின் பெயர்கள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிகள் I (முழு நேரம் (முநே) மற்றும் பகுதி நேரம் (பநே) I**

| *தொ. இல.* | *உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் பெயர்* | *முகவரி* | *தொலைபேசி இலக்கங்கள்* | *வழங்கப்படும் பாடநெறிகள்* |
|---|---|---|---|---|
| 01 | ஹார்டி உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - அம்பாறை | பேராசிரியர் ஈவன் ஏ ஹார்டி மாவத்தை, அம்பாறை | 063-2222056<br>063-2223035 | HNDT (Agriculture) (FT), HNDA (FT), HNDM (FT), HNDIT (FT), HNDTHM (FT),<br>HND in English (FT),<br>HNDA (PT), HND in English (PT)<br>HNDIT (PT) |
| 02 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - அநுராதபுரம் | ஏக்கர் 111, அனுலா மாவத்தை, பண்டுலகம, அநுராதபுரம் | 025-2234417 | HNDIT(FT), HNDA (FT), HND in English (FT),<br>HNDIT(PT) HNDA (PT), HND in English (PT) |
| 03 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - பதுளை | கிறீன்லண்ட் ட்ரைவ், பதுளை | 055-2230218<br>055-2223818 | HNDIT (FT), HNDA (FT), HNDM (FT), HND in English (FT), HNDTHM (FT),<br>HNDIT (PT), HNDA (PT),<br>HND in English (PT) |
| 04 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - மட்டக்களப்பு | பிரதான வீதி, கோயில் குளம் கிழக்கு, ஆரையம்பதி, மட்டக்களப்பு | 065-2247519<br>065-2247470 | HNDIT (FT), HNDA (FT),<br>HND in English,(FT)<br>HNDA (PT), HND in English (PT),<br>HNDIT (PT), |
| 05 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கொழும்பு | இல.42, ரொட்ரிகோ பிளேஸ், கொழும்பு-15 | 011-2521152<br>011-2521282 | HNDE (Civil) (FT), HNDE (Mechanical) (FT),<br>HNDE (Electrical & Electronics) (FT)<br>HNDQS (FT), HNDBSE (FT) |
| 06 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - தெஹிவளை | இல. 51, வைத்திய வீதி, தெஹிவளை | 011-2738349 | HNDIT (FT), HNDA (FT), HNDM (F/T), HNDBA (FT), HND in English (FT), HNDBF (FT), HNDTHM (FT),<br>HNDA (PT), HND in English (PT), |

| *தொ. இல.* | *உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் பெயர்* | *முகவரி* | *தொலைபேசி இலக்கங்கள்* | *வழங்கப்படும் பாடநெறிகள்* |
|---|---|---|---|---|
| 07 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - காலி | சிறிதம்ம மாவத்தை, லபுதூவ, அக்மீமன, காலி | 091-2246179 | HNDE (Civil)(FT), HNDE(Mechanical) (FT), HNDE(Electrical & Electronics) (FT), HNDQS(FT), HNDIT (FT), HNDT(Agriculture)(FT), HNDA (FT), HNDM(FT), HNDTHM(FT), HNDBA(FT), HND in English (FT), HNDA (PT), HNDIT (PT), HND in English (PT) |
| 08 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கம்பஹா | நய்வல, எஸ்ஸால, வெயாங்கொடை | 033-2287519<br>033-2292544 | HNDT (Agriculture) (FT), HNDIT (FT), HNDFT(FT), HNDA (FT), HNDA (PT), HNDIT (PT), HND in English (PT) |
| 09 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - யாழ்ப்பாணம் | இல. 665/2, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் | 021-2222595<br>021-2229803 | HNDE (Civil)(FT), HNDE ((Electrical & Electronics) (FT), HNDQS (FT), HNDA (FT), HND in English (FT), HNDM (FT), HNDIT (FT), HNDIT (PT), HNDA (PT), HND in English (PT), HNDPM (PT) |
| 10 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம்- கண்டி | இல. 16, கெப்பெட்டிபொல வீதி, கண்டி | 081-2232097<br>081-2226644 | HNDIT (FT), HNDA (FT), HNDM(FT), HNDBA(FT), HND in English (FT), HNDTHM (FT), HNDA (PT), HND in English (PT), HNDIT (PT) |
| 11 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கேகாலை | பண்டாரநாயக்க மாவத்தை, கேகாலை | 035-2221297<br>035-2221713 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT), HNDPM (FT), HNDA (PT), HND in English (PT) |
| 12 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - குருநாகல் | இல. 22/1, வில்கொடை வீதி, குருநாகல் | 037-2229583<br>037-2224911 | HNDIT (FT), HNDA (FT), HNDM (FT), HND in English (FT), HNDTHM (FT), HNDIT (PT), HNDA (PT), HND in English (PT) |
| 13 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - மன்னார் | உயிலங்குளம் மன்னார் | 023-2223045<br>0767966111 | HND in English (FT), HNDIT (FT) |
| 14 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - நாவலப்பிட்டி | ஹெயின்ஃபோர்ட் தோட்டம், நாவலப்பிட்டிய | 077-6594248 | HNDTHM (FT), HNDM (FT), HND in English (FT), HND in English (PT) HNDIT (FT), HNDIT (PT), HNDBF (FT) |
| 15 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - இரத்தினபுரி | புதிய நகரம், இரத்தினபுரி | 045-2231492<br>045-2231493 | HNDIT (FT), HNDA (FT), HND in English (PT), HNDA (PT), HND in English (FT), |
| 16 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - சம்மாந்துறை | யுவுஜ ஒழுங்கை, சம்மாந்துறை | 067-2261304 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT), HNDM (FT), HNDIT (PT), HNDA (PT), HND in English (PT) |

| தொ. இல. | உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் பெயர் | முகவரி | தொலைபேசி இலக்கங்கள் | வழங்கப்படும் பாடநெறிகள் |
|---|---|---|---|---|
| 17 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - தங்காலை | யாவத்த, நெதோல்பிட்டிய, தங்காலை | 047-2241845<br>047-2241846 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT) |
| 18 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம்-திருகோணமலை | கிண்ணியா வீதி, வரோதய நகர், திருகோணமலை | 026-2223232 | HNDA (FT), HND in English (FT), HNDIT (FT), HNDA (PT), HNDIT (PT), HND in English (PT) |
| 19 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - வவுனியா | ஓப் A 9 வீதி, வேப்பங்குளம், ஓமந்தை, வவுனியா | 024-2052733<br>077-6162010 | HNDA (FT), HND in English (FT), HNDA (PT), HND in English (PT), HNDIT (FT), HNDIT (PT) |

குறிப்பு.-

1. விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவுத் தேதிக்கு முன் தேவையான நுழைவுத் தகுதிகளை பூர்த்தி செய்ய வேண்டும்.
2. இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் (இ.உ.தெ.க.நி) கீழ் காணப்படும் உயர் தொழில்நுட்ப நிறுவனங்களால் நடத்தப்படும் மூன்று வருட அல்லது அதற்கு மேற்பட்ட கால முழுநேர உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறியைத் தொடருவதற்குப் பதிவு செய்த மாணவர்கள், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் (அவ்வப்போது திருத்தப்பட்ட) கீழ் நிறுவப்பட்ட அரச பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவகமொன்றில் அனுமதி பெறுவதற்குத் தகுதிபெற மாட்டார்கள்.

   **மூன்று வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட முழுநேர உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறிகள்**

   I. கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDA)
   II. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (சிவில்) (HNDE (CIVIL)
   III. பொறியியல்; பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) (HNDE (ELECTRICAL & ELECTRONICS)
   IV. பொறியியல்; பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (இயந்திரவியல்) (HNDE (MECHANICAL)
   V. உயர் தேசிய டிப்ளோமா (நிருமாண சேவைகள் பொறியியல்) (HNDBSE)
   VI. தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (விவசாயம்) (HNDT(Agriculture)
   VII. முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDM)
   VIII. சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDTHM)

3. முழு நேர கற்கைநெறிகளுக்கு 23 வயதுக்கு குறைவான விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமுவதுடன் 2024 இல் G.C.E.(A/L) தேர்வை வெற்றிகரமாக முடித்த விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. ஒரு குறிப்பிட்ட ATI இல் பாடநெறியைத் தொடங்க குறைந்தபட்சம் 50 மாணவர்கள் குறிப்பிட்ட பாடநெறியில் பதிவு செய்திருத்தல் வேண்டும். திட்டத்தைத் தொடங்க போதுமான எண்ணிக்கையில் மாணவர்கள் இல்லை என்றால், அத்தகைய மாணவர்கள் அதே திட்டம் நடத்தப்படும் அருகிலுள்ள ATI க்கு மாற்றப்படுவார்கள். இறுதி முடிவு பணிப்பாளர் நாயகத்தினால் எடுக்கப்படும்.
5. அனைத்து பாடப்பிரிவுகளின் முழுநேர மாணவர்கள் வாரநாட்களிலும் தேவைப்பட்டால் வார இறுதி நாட்களிலும் விரிவுரைகளில் கலந்து கொள்ள வேண்டும்.
6. பகுதி நேர பாடநெறிகள் வார இறுதி நாட்களில் நடாத்தப்படும்.
7. முழுநேர மற்றும் பகுதி நேர பாடநெறிகளுக்;கான பயிற்றுவிக்கும் முறை பௌதிகரீதியானதாக (வகுப்பில்) இருக்கும். எனினும், தேவையைப் பொறுத்து இருவழிக் கற்பித்தலும் பிரயோகிக்கப்படும்.
8. கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDA) (முழு நேர) திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாம் வருடங்கள் வார நாட்களில் மட்டுமே நடத்தப்படுகிறது. மூன்றாவது மற்றும் நான்காவது வருடங்கள் வார இறுதி நாட்களில் நடத்தப்படுகின்றன.

9. முழு நேரத் திட்டங்களின் மாணவர்கள் சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் உள்ளகப்; பயிற்சி பெற வேண்டும். பகுதி நேர மாணவர்கள் சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு ஒரு திட்டம்/தொழில்துறை பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

10. பகுதி நேர விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட துறையில் பணியமர்த்தப்பட்டிருக்க வேண்டும்.

11. ஒரு மாணவர் முழுநேர பாடநெறியில் சேர்ந்தவுடன், வேறு எந்த யுவுஐ க்கும் மாற்றுவது எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12. எந்தவொரு HND பாடத்திற்கும் பதிவு செய்த மாணவர்கள், சம்பந்தப்பட்ட நிறுவனம் வழங்கிய பதிவு முடிவடையும் தேதியில் இருந்து 60 நாட்களுக்கு முன் எந்தவித கட்டணமும் இன்றி தங்கள் பதிவை இரத்து செய்ய அனுமதிக்கப்படுவார்கள். மாணவர் பதிவுக்கான கடைசி தேதி /பதிவுக்கான இறுதி தேதி தொடக்க விழா/மாணவர் வழிகாட்டுதல் திட்டத்திற்கு ஒரு நாள் முன்னதாக நடைபெறும்.

13. (i) 60 நாட்களுக்குப் பிறகு தங்கள் பதிவை இரத்து செய்யும் மாணவர்களிடமிருந்து பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து மாதம் ரூபா 5,000.00 வசூலிக்கப்படும். ஆறு மாத காலம் அல்லது அதற்கு அதிகமான காலத்தில் தமது பதிவை இரத்து செய்யும் மாணவர்களிடமிருந்து அதிகபட்சம் ரூபா. 30,000.00 அறவிடப்படும்.

(ii) திரும்பப்பெறக்கூடிய ஆரம்ப வைப்புத்தொகை ரூபா 10,000.00 பகுதி நேர மாணவர்களின் பதிவின் போது அறவிடப்படுவதுடன் அது பாடநெறியின் முடிவில் திருப்பி செலுத்தப்படும். மாணவர் பாடநெறியிலிருந்து முன்னதாக வெளியேறினால், இந்த வைப்புத்தொகை மீளச் செலுத்தப்படமாட்டாது. பகுதி நேர விண்ணப்பதாரர்களில் பதிவின்போது, மொத்தப் பாடநெறிக் கட்டணத்தையும் முழுமையாகச் செலுத்தும் விண்ணப்பதாரர்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.

14. முழுநேர மற்றும் பகுதிநேர மாணவர்களுக்கு அரையாண்டு இறுதித் தேர்வுகள் வார நாட்கள் மற்றும் வார இறுதி நாட்களில் நடைபெறும்.

15. க.பொ.த (உ/த) மற்றும் க.பொ.த (சா/த) பரீட்சைகள் இலங்கையின் பரீட்சைகள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட வேண்டும்.

16. தவறான தகவலை வழங்கிய விண்ணப்பதாரர்கள் நிராகரிக்கப்படுவார்கள்.

17. இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் (SLIATE) பணிப்பாளர் நாயகத்தின் முடிவே உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு 2025 கல்வியாண்டுக்கான மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான இறுதி முடிவாக இருக்கும்.

18. ATI-களின் கிடைக்கக்கூடிய இருக்கை திறனின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

19. ஆன்லைன் விண்ணப்ப வசதிகள் இல்லாத மாணவர்கள் சேவைகளைப் பெற அருகிலுள்ள ATI-க்குச் செல்லலாம்.

20. மேம்பட்ட தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் HND திட்டங்களுக்கு விண்ணப்பிக்கும்போது, விண்ணப்பதாரிகள் தங்கள் வசிப்பிடத்திற்கு அருகிலுள்ள மேம்பட்ட தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு விண்ணப்பிப்பது நல்லது.

21. மேலதிக விபரங்களுக்கு www.sliate.ac.lk என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 2025.07.14

பணிப்பாளர் நாயகம்

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் (SLIATE),
53A, வைத்தியா வீதி,
தெஹிவளை.

06-75

## நீதிச்சேவை ஆணைக்குழு

அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025

1. 2088/26 ஆம் இலக்கமுடைய 2018.09.11 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2025 இற்கு தோற்றுவதற்கு தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பரீட்சையானது நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் கொழும்பில் நடாத்தப்படும். நீதிச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இப்பரீட்சையினை ஒத்தி வைப்பதற்கான அல்லது செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

**2. சேவை நிபந்தனைகள் :**

2.1 அரசியலமைப்புச் சட்டத்தின் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய ஆட்சேர்க்கப்படுகின்ற நீதிமன்ற தட்டெழுத்தாளர் சேவை உத்தியோகத்தர்கள் தாபனவிதிக் கோவைக்கும், நிதிப்பிரமாணங்களுக்கும், நீதிச்சேவை ஆணைக்குழுவினால் தற்போது வெளியிடப்பட்டுள்ள மற்றும் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் சுற்றுநிருபங்களுக்கும், பணிப்புக்களுக்கும் கட்டளைகளுக்கும் கீழ் படிதல் வேண்டும்.

2.2 இந்நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும். அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டு 05 வருடங்களுக்குள் வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்.

2.3 தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறும் மற்றும் /அல்லது நியமனம் பெற்ற பதவியில் அல்லது நியமனம் வழங்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளை பொறுப்பேற்பதனை மறுக்கும் அல்லது புறக்கணிக்கும் விண்ணப்பதாரிகளின் நியமனத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு அமைவாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

2.4 அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் 18/2020 மற்றும் அதற்கேற்ப நீதிச்சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 456 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவாக அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) தரம் III இற்குரிய இரண்டாம் நிலைப்படி பதவியில் இணைந்து 3 வருடத்தினுள் மற்றைய அரசமொழி தொடர்பிலான தேர்ச்சியினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

3. அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் இல 10/2025 மற்றும் 25.03.2025 ஆந் திகதி சுற்றுநிருபத்திற்கு அமைய அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) தரம் III இற்கு அமைய சம்பளமுறைமை பின்வருமாறு வழங்கப்படும்.

**சம்பளக் குறியீடு** – (MN 2-2025)

சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) - ரூ. 48,470.00 -10x540- 11x630- 10x1010- 10x1190- ரூ. 82,800.00

நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்ப தாரர்களிற்கு ரூ. 48,470.00 ஆரம்ப சம்பளமாக நிறுவப்பட்டு அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் இல. 10/2025 மற்றும் 25.03.2025 திகதி சுற்றுநிருபத்தின் அட்டவணை III இற்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

4. இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்திற்குரியது.

ஓய்வூதிய சம்பளத்துடன் கூடியது என மேலே குறிப்பிடப்பட்டிருந்தாலும் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்;படும் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச்சேவையின் நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) தரம் III இற்கு நியமிக்கப்படும்

உத்தியோகத்தர்கள் தொடர்பாகவும் அவர்களுக்குரிய ஓய்வூதிய சம்பள முறை தொடர்பாக அரசு மற்றும்/அல்லது நீதிச்சேவை ஆணைக்குழுவினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு அவர்கள் கீழ் படிதல் வேண்டும்.

5. **தகைமைகள் :**

அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவைக்குரிய நீதிமன்ற முகாமைத்துவ உதவிச்சேவையின் நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) தரம் III இற்குரிய பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு கீழ்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ஆ) 13.06.2025 திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(இ) நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
(உ) கீழ்வரும் கல்வித்தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி உட்பட நான்கு (04) பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதரப் சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் சிங்கள மொழியிலும், நீதிமன்ற தட்டெழுத்தாளர் (தமிழ்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமிழ் மொழியிலும், நீதிமன்ற தட்டெழுத்தாளர் (ஆங்கிலம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் ஆங்கில மொழியிலும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)

II. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, தொழில்நுட்ப கல்லூரி அல்லது அரச பதிவுடைய பயிற்சியளிக்கும் நிறுவனமொன்றில் தட்டெழுத்து பாடநெறியினை அல்லது தட்டெழுத்தினை ஒரு பாடமாக கொண்ட கணனி பாடநெறியினை சிறந்த முறையில் பயின்று அதில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஈ) அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் சகல அபேட்சகர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் சிறந்த உடல், உள ஆரோக்கியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு** – சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆம் திகதி அல்லது அதற்கு முதல் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6. **பரீட்சை நடபடிமுறைகள் :**

இப்பரீட்சையானது மூன்று (03) வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும்.

| | *வினாப்பத்திரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைய பெற வேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01. | மொழித்திறன் (சிங்களம்/தமிழ்) | 100 | 40 |
| 02. | உளச்சார்பு (சிங்களம்/ தமிழ்) | 100 | 40 |
| 03. | தட்டெழுத்து (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) | 100 | * |

(* வெற்றிடங்களின் எண்ணிக்கையினை கருத்திற் கொண்டு தட்டெழுத்து பரீட்சையில் சித்திபெற வேண்டிய புள்ளி மட்டமானது நீதிச்சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.)

இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் தாம் விரும்பிய ஒரு மொழியை மாத்திரம் தெரிவு செய்ய முடியும்.

விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழி மூலம் மாத்திரமே "மொழித்திறன்" மற்றும் "உளச்சார்பு" வினாப்பத்திரங்களுக்கு விடையளிக்க வேண்டும்.

தட்டெழுத்து தொடர்பாக தாம் விண்ணப்பிக்கும் பதவிக்கு அமைய வினாத் தாளினை தெரிவு செய்ய வேண்டும். கடமை நிமித்தம் அபேட்சகருக்குள்ள தகைமைகள் மற்றும் திறன்களை பரீட்சிக்கும் நோக்கில் இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும்.

**பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

| | *வினாப்பத்திம்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| 01 | மொழித் திறன்<br>(சிங்களம்/ தமிழ்) | இவ்வினாப்பத்திரம் பரீட்சாத்தியின் கருத்து தெரிவித்தல், கிரகித்தல், எழுத்தறிவு, மொழி மற்றும் கட்டுரை, கடிதம் ஒன்றுக்கான பரும்படியைத் தயாரித்தல், வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைவாக வரைபுகள் மற்றும் அட்டவணைகள் தயாரித்தல், சுருக்கம் எழுதுதல், தரப்பட்டுள்ள வாக்கியங்கள் சிலவற்றின் கருத்தை தனி வாக்கியத்தில் எழுதுதல் மற்றும் எளிய இலக்கண பயன்பாடு தொடர்பிலான அறிவை பரீட்சிக்கும் விடயரீதியான வினாக்களைக் கொண்டதாகும். |
| 02 | உளச்சார்பு<br>(சிங்களம்/ தமிழ்) | இவ்வினாப்பத்திரமானது பரீட்சாத்தியின் எண் சார்ந்த திறன், தர்கிக்கும் ஆற்றல், பொது அறிவு என்பவற்றை அளவிடும் வகையிலான விடயப்பரப்பிற்குரிய வினாக்களைக் கொண்டதாக அமையும். |
| 03 | தட்டெழுத்து<br>(சிங்களம்/தமிழ்/ ஆங்கிலம்) | சிங்களம் - தரப்படும் 400 சொற்கள் கொண்ட பந்தியொன்றை நிமிடத்திற்கு 20 சொற்கள் என்ற வேகத்தில் தட்டச்சு செய்தல் |
| | | தமிழ் - தரப்படும் 400 சொற்கள் கொண்ட பந்தியொன்றை நிமிடத்திற்கு 20 சொற்கள் என்ற வேகத்தில் தட்டச்சு செய்தல். |
| | | ஆங்கிலம் - தரப்படும் 600 சொற்கள் கொண்ட பந்தியொன்றை நிமிடத்திற்கு 30 சொற்கள் என்ற வேகத்தில் தட்டச்சு செய்தல |

**குறிப்பு :** அனைத்து எழுத்து மூல விடைப்பத்திரங்கள் தொடர்பிலும் தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

இவ்வினாப்பத்திரங்கள் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள், கட்டமைப்பு ரீதியான கட்டுரை வினாக்கள் மற்றும்/ அல்லது பிரயோக ரீதியிலான வினாக்களைக் கொண்டவையாகும்.

7. பரீட்சையின் சகல பாடங்களிலும் சித்தி பெற்ற விண்ணப்பதாரிகளில், உயர் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளிலிருந்து கீழ்நோக்கிய புள்ளி ஒழுங்கினை பின்பற்றி, தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப்பரீட்சையின் பின்னர் அப்பரீட்சைக்காக ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான விண்ணப்பதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படலாம். எவ்வாறெனினும் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் குறித்த வெற்றிடங்களின் எண்ணிக்கையினை நிரப்பாமல் இருப்பதற்கான தீர்மானமும் எடுக்கப்படலாம்.

**பரீட்சை பெறுபேறுகள் -** நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விண்ணப்பதாரிகளுக்கு தபால் மூலம் பரீட்சை பெறுபேறுகள் அனுப்பப்படும்.

8. **பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை :**

விண்ணப்பதாரி ஒருவர் முக்கியத்துவம் வாய்ந்தது என கருதப்படும் யாதேனுமொரு விடயம் தொடர்பான பிழையான கூற்றினை தெரிவித்துள்ளமை அல்லது உண்மையை மறைத்துள்ளமை தெரிவு செய்யப்பட முன்னர் தெரிய வருமாயின் தகைமையற்றவராக ஆக்கப்படலாம். தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமாயின் சேவையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது அவரது சேவை முடிவுறுத்தப்படலாம்.

9. **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணம் ரூ. 400 ஆகும். இக்கட்டணத்தை “நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்” பெயரில் மக்கள் வங்கி, டாம் வீதிக் கிளையில் பேணிச் செல்லப்படும் 297 100 199 025 039 கணக்கிற்கு வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் அகற்ற முடியாத வகையில் ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்பிரதி ஒன்றினை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) எக்காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படாததுடன் காசுக்கட்டளைகள் மற்றும் முத்திரைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

10. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட வேண்டியதுடன், 8 ½” x 12” (A4) அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். இதற்காக கணினியினால் தயாரிக்கப்பட்ட அல்லது தட்டெழுத்து செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பயன்படுத்தலாம்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமையான தகவல்களைக் கொண்டிராத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் உள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகவா என விண்ணப்பதாரி தேடிப்பார்த்தல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) பரீட்சைக்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத்தபாலில் 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு செயலகம், கொழும்பு 12 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தைக் கொண்ட கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் “அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற தட்டெழுத்தாளர்; (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025” என்பதனை தெளிவாக எழுத வேண்டும். 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

(இ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையின் அதிபர் ஒருவரினால், சமாதான நீதவான் ஒருவரினால், சத்திய ஆணையாளரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படையின் அதிகாரமுடைய உத்தியோகத்தர் ஒருவரினால், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொலிஸ் சேவையில் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது பகிரங்க சேவைக்குரிய நிரந்தர பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை தரத்திற்குரிய உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஈ) தற்போது பகிரங்க சேவையில் ஈடுபட்டுள்ள மேற்குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தங்களது திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(உ) எல்லா விதங்களிலும் முழுமையற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தொலைந்து போதல் மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறல் என்பது தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

11. பரீட்சைக்குத் தோற்றல் - விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்படமாட்டாது. அனுமதி அட்டை தபால் மூலம் அனுப்பிவைக்கபடும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிட்டால் நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதன் போது விண்ணபித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைக் குறிப்பிடவேண்டும். கொழும்புக்கு வெளியே வதியும் விண்ணப்பதாரிகள் எனின் தொலைநகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதியினை பெற்றுக்கொள்வதற்காக உங்களது தொலைநகல் இலக்கத்தையும் மற்றும் மேற்குறிப்பிட்ட விபரங்களையும் உள்ளடக்கிய கோரிக்கை கடிதமொன்றை 0112 421 206 அல்லது 0112 446 111 இலக்கங்களுக்கு அனுப்புவதுடன் அது தொடர்பில் விசாரித்தல் பயன்மிக்கதாக இருக்கும். மேலும் நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு விண்ணப்பதாரியிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டதனை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்திருப்பது பயன்மிக்கதாய் அமையும்.

12. பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளம் - பரீட்சார்த்தி ஒருவர் தாம் தோன்றும் எல்லா விடயதானங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு
(இ) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்

13. **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

(அ) எல்லா விதத்திலும் முழுமையான விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் அனுமதி அட்டை வழங்கப்படும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்திகள் தங்களுக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். அனைத்து பரீட்சார்த்திகளும் உரிய பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதி அட்டையை, கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டு பரீட்சைக்கு தோற்றும் முதலாம் நாள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சாத்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச் சட்டவிதிகளை மீறினால் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

குறிப்பு – விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுதலானது அவ் விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

14. இவ் ஒழுங்குவிதிகளில் கவனத்திற் கொள்ளப்படாத விடயங்கள் இருப்பின் அவ்விடயங்கள் தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

15. இவ் அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வடிவங்களுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலிற்கு அமைவாக செயற்படுதல் வேண்டும்.

16. இல. 2223 மற்றும் 2021.04.09 திகதியிடப்பட்ட வர்த்தமானி அறித்தலின் அடிப்படையில் அட்டவணைப்டுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2021” இற்கு ஏற்கனவே விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் மீண்டும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க அவசியமில்லை என்பதுடன் அவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளும் பூர்த்தி செய்ய வேண்டிய திகதி ஆகிய 2021.05.10 திகதிக்கு தகைமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகள் மீண்டும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதில் தடை ஏதும் இல்லை.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

கையொப்பமிட்டது

எச்.எஸ். சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
2025, யூன் 06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை – 2025

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

01. மொழி

பரீட்சைக்குத் தோற்றும் மொழி

சிங்களம் -1

தமிழ் - 2

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

02. விண்ணப்பிக்கும் பதவி

தட்டெழுத்தாளர் (சிங்களம்) ☐

தட்டெழுத்தாளர் (தமிழ்) ☐

தட்டெழுத்தாளர் (ஆங்கிலம்) ☐

03. பிரத்தியேக தகவல்கள் :

3.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு/திருமதி/செல்வி ..........................................................................................
..........................................................................................................................................................

(ஆங்கில கெபிடல் எழுத்தில்) உதாரணம் : SRIWARDANA, A.P.K.

3.2 முழுப்பெயர் : ..........................................................................................................

(ஆங்கில கெபிடல் எழுத்தில்)

3.3 முழுப்பெயர் : ..........................................................................................................

(சிங்களத்தில் / தமிழில்)

3.4 பிரத்தியேகமுகவரி ..........................................................................................................

(சிங்களத்தில் / தமிழில்)

3.5 வசிக்கும் மாவட்டம் : ..........................................................................................................

3.6 அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெபிடல் எழுத்தில்) :

..........................................................................................................................................

3.7 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

3.8 பிறந்த திகதி :

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.9 2025.06.13 ஆம் திகதிக்கு வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.10 பால் நிலை : ஆண் - 1 பெண் - 2 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

3.11 சமூக அந்தஸ்த்து : திருமணமானவர் - 1 திருமணமாகாதவர் - 2

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.) ☐

3.12 தொலைபேசி இலக்கம் :

நிலையானது : ……………………. கையடக்க தொலைபேசி : ……………

மின்னஞ்சல் : …………………….

04. கல்வித் தகைமைகள் :

4.1 க.பொ.த.(சா/த) பரீட்சை தொடர்பான விபரங்கள்:

(க.பொ.த.(சா/த) பரீட்சை முடிவுத் தாளின் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்களை இணைக்குக.)

(1) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் : ............................
(2) பரீட்சை சுட்டெண் : ............................
(3) பெறுபேறுகள் :

| *விடயம்* | *தரம்* | *விடயம்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.2 க.பொ.த.(உ/த) பரீட்சை தொடர்பான பெறுபேறுகள் :

(1) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் : ............................
(2) பரீட்சை சுட்டெண் : ............................
(3) பெறுபேறுகள் :

| *விடயம்* | *தரம்* |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

05. தட்டெழுத்து தொடர்பாக பயின்றுள்ள பாடநெறிகள் : ....................................................

(பூர்த்தி செய்துள்ள பாடநெறிகளின் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்களை இணைக்குக.)

06. வேறு தகைமைகள் : ........................................................................................................

..............................................................................................................................

07. நீங்கள் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ?

(உரிய கூட்டினுள் ( ✓ ) அடையாளமிடுங்கள்),

ஆம் ☐ இல்லை ☐

'ஆம்' எனின் விபரங்களை குறிப்பிடுக. ..........................................................................

08. பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :
பரீட்சைக்கட்டணம் செலுத்திய அலுவலகம் : ..................................
பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி : .....................................
செலுத்திய பணம் : ..................................

| |
|---|
| பற்றுச்சீட்டினை அகற்ற முடியாதவாறு ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாய் இருக்கும்.) |

09. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் :

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் சரியானதும் உண்மையானதும் என தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் யாதேனும் பகுதிகள் நிரப்பப்படாமல் மற்றும் / அல்லது பிழையாக நிரப்பப்படுவதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை தாங்கிக் கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும் இதில் அனைத்து பகுதிகளும் சரியான முறையில் நிரப்பப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்ட கூற்று பிழையானது என நிரூபிக்கப்பட்டால், நியமனம் பெறுவதற்கு முன்னர் தகைமையற்றவர் ஆவதற்கும் நியமனம் பெற்ற பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் முடியும் என்பதனை நன்கறிவேன்.

(இ) மேலும், பரீட்சையை நடாத்துவதுடன் தொடர்புடையதாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் விதிகளுக்கு நான் கீழ்படிகின்றேன் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

………………… …………………………………
திகதி விண்ணப்பதாரியன் கையொப்பம்

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி ………………………… என்பவரை நான் பிரத்தியேகமான முறையில் நன்கறிவேன் என்பதனையும், எனது முன்னிலையில் …………………….. திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்பதனையும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதனையும் அப்பற்றுச்சீட்டினை இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

………………… ……………………………………….
திகதி கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ………………………..
பதவி : ………………………………………………
முகவரி : ……………………………………………
(உத்தியோகப்பூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்துக.)

**திணைக்களத் தலைவரின் விதந்துரை**

இந் ……………………………………….. சேவையாற்றும் திரு/திருமதி/செல்வி ……………………என்பவருக்கு அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற தட்டெழுத்தாளர்; (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) தரம் III இற்குரிய பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான கல்வித் தகைமைகளை கொண்டுள்ளார் என்பதனையும், விண்ணப்பதாரி இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதனையும் 2025.06.13 ஆம் திகதிக்கு 35 வயதிற்கு மேற்படாதவர் என்பதனையும், எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனையும் தெரிவித்து, விண்ணப்பதாரியின் விண்ணப்பத்தை விதந்துரை செய்து இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

திகதி :- திணைக்களத் தலைவரின் கையொப்பம் :-

உத்தியோகப்பூர்வ முத்திரை :-

06-96

## நீதிச்சேவை ஆணைக்குழு

அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025

1. 2088/26 ஆம் இலக்கமுடைய 2018.09.11 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2025 இற்கு தோற்றுவதற்கு தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பரீட்சையானது நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் கொழும்பில் நடாத்தப்படும். நீதிச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இப்பரீட்சையினை ஒத்தி வைப்பதற்கான அல்லது செல்லு படியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

**2. சேவை நிபந்தனைகள் :**

2.1 அரசியலமைப்புச் சட்டத்தின் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய ஆட்சேர்க்கப்படுகின்ற நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் சேவை உத்தியோகத்தர்கள் தாபனவிதிக் கோவைக்கும், நிதிப்பிரமாணங்களுக்கும், நீதிச்சேவை ஆணைக்குழுவினால் தற்போது வெளியிடப்பட்டுள்ள மற்றும் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் சுற்றுநிருபங்களுக்கும், பணிப்புக்களுக்கும் கட்டளைகளுக்கும் கீழ் படிதல் வேண்டும்.

2.2 இந்நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும். அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டு 05 வருடங்களுக்குள் வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்.

2.3 தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறும் மற்றும் /அல்லது நியமனம் பெற்ற பதவியில் அல்லது நியமனம் வழங்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளை பொறுப்பேற்பதனை மறுக்கும் அல்லது புறக்கணிக்கும் விண்ணப்பதாரிகளின் நியமனத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு அமைவாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

2.4 அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் 18/2020 மற்றும் அதற்கேற்ப நீதிச்சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 456 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவாக அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்குரிய இரண்டாம் நிலைப்படி பதவியில் இணைந்து 3 வருடத்தினுள் மற்றைய அரசமொழி தொடர்பிலான தேர்ச்சியினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

3. அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் இல. 10/2025 மற்றும் 25.03.2025 ஆந் திகதிய சுற்றுநிருபத்திற்கு அமைய அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்கு அமைய சம்பளமுறைமை பின்வருமாறு வழங்கப்படும்.

**சம்பளக் குறியீடு – (MN 2-2025)**

சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) - ரூ. 48,470.00 10x540- 11x630- 10x1010- 10x1190 - ரூ. 82,800.00

நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரர்களிற்கு ரூ. 48,470/- ஆரம்ப சம்பளமாக நிறுவப்பட்டு அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் இல. 10/2025 மற்றும் 25.03.2025 ஆந் திகதி சுற்றுநிருபத்தின் அட்டவணை III இற்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

4. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியது.

ஓய்வூதிய சம்பளத்துடன் கூடியது என மேலே குறிப்பிடப்பட்டிருந்தாலும் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச்சேவையின் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் தொடர்பாகவும் அவர்களுக்குரிய ஓய்வூதிய சம்பள முறை தொடர்பாக அரசு மற்றும்/அல்லது நீதிச்சேவை ஆணைக்குழுவினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு அவர்கள் கீழ் படிதல் வேண்டும்.

5. **தகைமைகள் :**

அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவைக்குரிய நீதிமன்ற முகாமைத்துவ உதவிச்சேவையின் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்குரிய பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு கீழ்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ஆ) 13.06.2025 ஆந் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(இ) நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
(உ) கீழ்வரும் கல்வித்தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. ஆங்கில மொழி உட்பட நான்கு (04) பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

II. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, தொழில்நுட்ப கல்லூரி அல்லது அரச பதிவுடைய பயிற்சியளிக்கும் நிறுவனமொன்றில் சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து பாடநெறியினை சிறந்த முறையில் பயின்று அதில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஈ) அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் சகல அபேட்சகர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் சிறந்த உடல், உள ஆரோக்கியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு** – சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆம் திகதி அல்லது அதற்கு முதல் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6. **பரீட்சை நடபடிமுறைகள்.**

இப்பரீட்சையானது மூன்று (03) வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும்.

| | *வினாப்பத்திரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைய பெற வேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01. | மொழித்திறன் (சிங்களம்/ தமிழ்) | 100 | 40 |
| 02. | உளச்சார்பு (சிங்களம்/ தமிழ்) | 100 | 40 |
| 03. | சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து (ஆங்கிலம்) | 100 | * |

(* வெற்றிடங்களின் எண்ணிக்கையினை கருத்திற் கொண்டு சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து பரீட்சையில் சித்திபெற வேண்டிய புள்ளி மட்டமானது நீதிச்சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.)

இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் தாம் விரும்பிய ஒரு மொழியை மாத்திரம் தெரிவு செய்ய முடியும்.

விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழி மூலம் மாத்திரமே "மொழித்திறன்" மற்றும் "உளச்சார்பு" வினாப்பத்திரங்களுக்கு விடையளிக்க வேண்டும்.

சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து விண்ணப்பதாரர்களுக்கு ஆங்கில மொழி மூலம் மாத்திரமே விடையளிக்க முடியும். கடமை நிமித்தம் அபேட்சகருக்குள்ள தகைமைகள் மற்றும் திறன்களை பரீட்சிக்கும் நோக்கில் இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும்.

**பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

| | *வினாப்பத்திம்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| 01 | மொழித் திறன் (சிங்களம்/ தமிழ்) | இவ்வினாப்பத்திரம் பரீட்சாத்தியின் கருத்து தெரிவித்தல், கிரகித்தல், எழுத்தறிவு, மொழி மற்றும் கட்டுரை, கடிதம் ஒன்றுக்கான பரும்படியைத் தயாரித்தல், வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைவாக வரைபுகள் மற்றும் அட்டவணைகள் தயாரித்தல், சுருக்கம் எழுதுதல், தரப்பட்டுள்ள வாக்கியங்கள் சிலவற்றின் கருத்தை தனி வாக்கியத்தில் எழுதுதல் மற்றும் எளிய இலக்கண பயன்பாடு தொடர்பிலான அறிவை பரீட்சிக்கும் விடயரீதியான வினாக்களைக் கொண்டதாகும். |
| 02 | உளச்சார்பு (சிங்களம்/ தமிழ்) | இவ்வினாப்பத்திரமானது பரீட்சாத்தியின் எண் சார்ந்த திறன், தர்க்கிக்கும் ஆற்றல், பொது அறிவு என்பவற்றை அளவிடும் வகையிலான விடயப்பரப்பிற்குரிய வினாக்களைக் கொண்டதாக அமையும். |
| 03 | சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து (ஆங்கிலம்) | சுருக்கெழுத்து (ஆங்கிலம்)<br>நிமிடத்திற்கு 80 சொற்கள் என்ற ஆகக்குறைந்த வேகத்தில் 05 நிமிடங்களுக்குள் வாசிக்கப்படும் பந்தியொன்றை சுருக்கெழுத்து செய்து அதனை நிமிடத்திற்கு 08 சொற்கள் என்ற வேகத்தில் பிரதியாக்கல் வேண்டும்.<br>தட்டச்சு (ஆங்கிலம்)<br>தரப்படும் 600 சொற்கள் கொண்ட பந்தியொன்றை நிமிடத்திற்கு 30 சொற்கள் என்ற வேகத்தில் தட்டச்சு செய்தல். |

குறிப்பு : அனைத்து எழுத்து மூல விடைப்பத்திரங்கள் தொடர்பிலும் தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

இவ்வினாப்பத்திரங்கள் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள், கட்டமைப்பு ரீதியான கட்டுரை வினாக்கள் மற்றும் / அல்லது பிரயோக ரீதியிலான வினாக்களைக் கொண்டவையாகும்.

7. பரீட்சையின் சகல பாடங்களிலும் சித்தி பெற்ற விண்ணப்பதாரிகளில், உயர் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளிலிருந்து கீழ்நோக்கிய புள்ளி ஒழுங்கினை பின்பற்றி, தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப்பரீட்சையின் பின்னர் அப்பரீட்சைக்காக ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான விண்ணப்பதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படலாம். எவ்வாறெனினும் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் குறித்த வெற்றிடங்களின் எண்ணிக்கையினை நிரப்பாமல் இருப்பதற்கான தீர்மானமும் எடுக்கப்படலாம்.

**பரீட்சை பெறுபேறுகள் -** நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விண்ணப்பதாரிகளுக்கு தபால் மூலம் பரீட்சை பெறுபேறுகள் அனுப்பப்படும்.

8. **பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை –**

விண்ணப்பதாரி ஒருவர் முக்கியத்துவம் வாய்ந்தது என கருதப்படும் யாதேனுமொரு விடயம் தொடர்பான பிழையான கூற்றினை தெரிவித்துள்ளமை அல்லது உண்மையை மறைத்துள்ளமை தெரிவு செய்யப்பட முன்னர் தெரிய வருமாயின் தகைமையற்றவராக ஆக்கப்படலாம். தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமாயின் சேவையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது அவரது சேவை முடிவுருத்தப்படலாம்.

9. **பரீட்சைக் கட்டணம்** - பரீட்சைக் கட்டணம் ரூ. 400 ஆகும். இக்கட்டணத்தை "நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்" பெயரில் மக்கள் வங்கி, டாம் வீதிக் கிளையில் பேணிச் செல்லப்படும் 297 100 199 025 039 கணக்கிற்கு வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் அகற்ற முடியாத வகையில்

ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்பிரதி ஒன்றினை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) எக்காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படாததுடன் காசுக்கட்டளைகள் மற்றும் முத்திரைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

10. **விண்ணப்பிக்கும் முறை –**

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட வேண்டியதுடன், 8 ½" x 12" (A4) அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். இதற்காக கணினியினால் தயாரிக்கப்பட்ட அல்லது தட்டெழுத்து செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பயன்படுத்தலாம்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமையான தகவல்களைக் கொண்டிராத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் உள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகவா என விண்ணப்பதாரி தேடிப்பார்த்தல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) பரீட்சைக்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத்தபாலில் 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு செயலகம், கொழும்பு 12 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தைக் கொண்ட கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025" என்பதனை தெளிவாக எழுத வேண்டும். 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

(இ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையின் அதிபர் ஒருவரினால், சமாதான நீதவான் ஒருவரினால், சத்தியப் பிரமாண ஆணையாளரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படையின் அதிகாரமுடைய உத்தியோகத்தர் ஒருவரினால், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொலிஸ் சேவையில் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது பகிரங்க சேவைக்குரிய நிரந்தர பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை தரத்திற்குரிய உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஈ) தற்போது பகிரங்க சேவையில் ஈடுபட்டுள்ள மேற்குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தங்களது திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(உ) எல்லா விதங்களிலும் முழுமையற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தொலைந்து போதல் மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறல் என்பது தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

11. **பரீட்சைக்கு தோற்றல் -** விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்படமாட்டாது. அனுமதி அட்டை தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிட்டால் நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதன் போது விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைக் குறிப்பிடவேண்டும். கொழும்பிற்கு வெளியே வதியும் விண்ணப்பதாரிகள் எனின் தொலைநகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதியினை பெற்றுக்கொள்வதற்காக உங்களது தொலைநகல் இலக்கத்தையும் மற்றும் மேற்குறிப்பிட்ட விபரங்களையும் உள்ளடக்கிய கோரிக்கை கடிதமொன்றை 0112 421 206 அல்லது 0112 446 111 இலக்கங்களுக்கு அனுப்புவதுடன் அது தொடர்பில் விசாரித்தல் பயன்மிக்கதாக இருக்கும். மேலும் நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு விண்ணப்பதாரியிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டதனை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்திருப்பது பயன்மிக்கதாய் அமையும்.

12. **பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளம்** - பரீட்சார்த்தி ஒருவர் தாம் தோன்றும் எல்லா விடயதானங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(இ) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

13. **பரீட்சைக்கு தோற்றுதல் :**

(அ) எல்லா விதத்திலும் முழுமையான விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் அனுமதி அட்டை வழங்கப்படும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்திகள் தங்களுக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். அனைத்து பரீட்சார்த்திகளும் உரிய பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதி அட்டையை, கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டு பரீட்சைக்கு தோற்றும் முதலாம் நாள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சாத்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச் சட்டவிதிகளை மீறினால் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

**குறிப்பு** – விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுதலானது அவ் விண்ணப்பதாரர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

14. இவ் ஒழுங்குவிதிகளில் கவனத்திற் கொள்ளப்படாத விடயங்கள் இருப்பின் அவ்விடயங்கள் தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

15. இவ் அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வடிவங்களுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலிற்கு அமைவாக செயற்படுதல் வேண்டும்.

16. இல. 2269 மற்றும் 2022.02.25 திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் அடிப்படையில் அட்டவணைப்படுத்தப் பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2022” இற்கு ஏற்கனவே விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் மீண்டும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க அவசியமில்லை என்பதுடன் அவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளும் பூர்த்தி செய்ய வேண்டிய திகதி ஆகிய 2022.02.25 ஆந் திகதிக்கு தகைமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகள் மீண்டும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதில் தடை ஏதும் இல்லை.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச்.எஸ். சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
2025, யூன் 06.

மாதிரி விண்ணபப்பப்படிவம்

அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை – 2025

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

01. மொழி

பரீட்சைக்கு தோற்றும் மொழி

சிங்களம் -1

தமிழ் - 2

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

02. பிரத்தியேக தகவல்கள் :

2.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு/திருமதி/செல்வி .................................................... ..........................................
..........................................................................................................

(ஆங்கில கெபிடல் எழுத்தில்) உதாரணம் : SRIWARDANA, A.P.K.

2.2 முழுப்பெயர் : .........................................................................................................

(ஆங்கில கெபிடல் எழுத்தில்)

2.3 முழுப்பெயர் : .........................................................................................................

(சிங்களத்தில் / தமிழில்)

2.4 பிரத்தியேகமுகவரி .........................................................................................................

(சிங்களத்தில் / தமிழில்)

2.5 வசிக்கும் மாவட்டம் : .........................................................................................

2.6 அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெபிடல் எழுத்தில்) :

..........................................................................................................................................

2.7 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

2.8 பிறந்த திகதி :

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

2.9 13.06.2025 திகதிக்கு வயது

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

2.10 பால் நிலை : ஆண் - 1 பெண் - 2 ☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

2.11 சமூக அந்தஸ்த்து : திருமணமானவர் - 1 திருமணமாகாதவர் - 2

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.) ☐

2.12 தொலைபேசி இலக்கம் :

நிலையானது : ……………………. கையடக்க தொலைபேசி : …………..……

மின்னஞ்சல் : ……………………..

03. கல்வித் தகைமைகள் :

3.1 க.பொ.த.(சா/த) பரீட்சை தொடர்பான விபரங்கள்:
(க.பொ.த.(சா/த) பரீட்சை முடிவுத் தாளின் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்களை இணைக்குக.)

(1) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் : ............................
(2) பரீட்சை சுட்டெண் : ............................
(3) பெறுபேறுகள் :

| *விடயம்* | *தரம்* | *விடயம்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

3.2 க.பொ.த.(உ/த) பரீட்சை தொடர்பான பெறுபேறுகள் :

(1) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் : ............................
(2) பரீட்சை சுட்டெண் : ............................
(3) பெறுபேறுகள் :

| *விடயம்* | *தரம்* |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

04. சுருக்கெழுத்து தொடர்பாக பயின்றுள்ள பாடநெறிகள் : ....................................................

(பூர்த்தி செய்துள்ள பாடநெறிகளின் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்களை இணைக்குக.)

05. வேறு தகைமைகள் : ..........................................................................................................

...........................................................................................................................................

06. நீங்கள் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ?

(உரிய கூட்டினுள் ( ✓ ) அடையாளமிடுங்கள்),

ஆம் ☐ இல்லை ☐

'ஆம்' எனின் விபரங்களை குறிப்பிடுக. ..........................................................................

07. பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :
பரீட்சைக்கட்டணம் செலுத்திய அலுவலகம் : ....................................
பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி : .....................................
செலுத்திய பணம் : ....................................

| |
|---|
| பற்றுச்சீட்டினை அகற்ற முடியாதவாறு ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாய் இருக்கும்.) |

08. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் :

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் சரியானதும் உண்மையானதும் என தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் யாதேனும் பகுதிகள் நிரப்பப்படாமல் மற்றும் / அல்லது பிழையாக நிரப்பப்படுவதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை தாங்கிக் கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும் இதில் அனைத்து பகுதிகளும் சரியான முறையில் நிரப்பப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்ட கூற்று பிழையானது என நிரூபிக்கப்பட்டால், நியமனம் பெறுவதற்கு முன்னர் தகைமையற்றவர் ஆவதற்கும் நியமனம் பெற்ற பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் முடியும் என்பதனை நன்கறிவேன்.

(இ) மேலும், பரீட்சையை நடாத்துவதுடன் தொடர்புடையதாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் விதிகளுக்கு நான் கீழ்படிகின்றேன் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

.....................
திகதி

.......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

09. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .............................. என்பவரை நான் பிரத்தியேகமான முறையில் நன்கறிவேன் என்பதனையும், எனது முன்னிலையில் .......................... திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்பதனையும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதனையும் அப்பற்றுச்சீட்டினை இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

.....................
திகதி

...............................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ............................
பதவி : ......................................................
முகவரி : ..................................................
(உத்தியோகப்பூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்துக.)

**திணைக்களத் தலைவரின் விதந்துரை :**

இந் ……………………………………….. சேவையாற்றும் திரு./திருமதி/செல்வி ………………………என்பவருக்கு அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்குரிய பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான கல்வித் தகைமைகளை கொண்டுள்ளார் என்பதனையும், விண்ணப்பதாரி இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதனையும் 13.06.2025 ஆந் திகதிக்கு 35 வயதுக்கு மேற்படாதவர் என்பதனையும், எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனையும் தெரிவித்து, விண்ணப்பதாரியின் விண்ணப்பத்தை விதந்துரை செய்து இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

திகதி : திணைக்களத் தலைவரின் கையொப்பம் :

உத்தியோகப்பூர்வ முத்திரை :

06-97

---

## இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர் - III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2025

இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர் பதவியில் நிலவும் 106 வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2025.07.14 ஆந் திகதியன்று வயது வருடம் 18 க்கு குறையாததும் 30 க்கு விஞ்சாத இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. (அதன் படி விண்ணப்பம் முன் வைக்க முடிவது 2007.07.14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு மற்றும் 1995.07.14 ம் திகதி அல்லது அதற்கு பின்பு பிறந்த திகதியை உடையவர்களுக்கு மாத்திரமாகும்.) விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசி திகதி 2025.07.14 ஆகும். இப் பரீட்சை 2025 வருடம் செத்தெம்பர் மாதம் நடாத்தப்படும். சகல விண்ணப்ப படிவங்களும் அத் திகதிற்கு முன்பு "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சை திணைக்களம், நிறுவன பரீட்சை மற்றும் திட்டமிடல் கிளை, த.பெ.1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். இவ் விண்ணப்பப்படிவம் தனிப்பட்ட பெயருக்கோ அல்லது கொண்டுவந்து கையளித்தலோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பூரணமற்ற, முறையற்ற தேவையான தகைமைகளை கொண்டிராத , முறைப்படி பரீட்சை கட்டணம் செலுத்தப்படாத , தாமதித்து கிடைக்கும் விண்ணப்பம் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அரச மற்றும் மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பப் படிவத்தை அந்தந்த நிறுவன பிரதானியூடாக அனுப்பி வைத்தல் வேண்டும். இப் பரீட்சை நடாத்துவதற்கான பரீட்சை நிலையங்கள் நிறுவுவதற்கு எதிர்பார்க்கும் நகர இலக்கங்கள் 1 ஆம் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. விண்ணப்பப் படிவத்தின் மேல் தலைப்பில் இந் நகர இலக்கத்தை அறிவித்தலின் படி பூரணப்படுத்தல் வேண்டும். விண்ணப்பித்த நகரத்தை பின்பு மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது. இருந்தும் பரீட்சை நிலையத்தை அமைப்பதற்கு போதுமானளவு விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அவ் விண்ணப்பதாரிகள் கிட்டிய அண்மை நகரத்தின் பரீட்சை நிலையத்திற்கு அனுப்பப்படுவார்கள். குறிப்பிடப்பட்டுள்ள சகல நகரங்களிலும் அல்லது அதிகமான நகரங்களில் பரீட்சை நிலையத்தை அமைப்பதற்கு போதுமானளவு விண்ணப்பதாரிகள் தொகை விண்ணப்பிக்காதவிடத்து பரீட்சை கொழும்பில் நடாத்துவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**1ம் அட்டவணை**

பரீட்சை நிலையம் அமையும் நகரமும் நகர இலக்கமும்

| *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்தறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலிய | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

02. **விண்ணப்பம் கோரப்படும் பதவி** : புகையிரத நிலைய அதிபர் III ஆம் தரம்

03. **பதவியின் கடமையின் தன்மை :**

இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் கீழுள்ள புகையிரத நிலையங்களின் செயற்பாடுகளுக்கு அமைய புகையிரத பொது முகாமையாளரின் பிரதிநிதியாக செயற்பட்டு புகையிரத பொது முகாமையாளரினால் குறிப்பாக வழங்கப்படும் ஆள் நிருவாகம், நிதி மற்றும் வணிக நடவடிக்கை, இணைப்பு செயற்பாடுகள், இயக்க செயற்பாடுகள் பிரவேச பத்திரம் மற்றும் கணக்கியல் நடவடிக்கை உட்பட்ட பல்வேறு தன்மைகளை உடையதும் மேற்பார்வை கடமைகளை காரியங்களும், மேற் கொள்ளப்படும் பதவிப் பிரிவாகும்.

04.**சம்பள அளவுத்திட்டம் :**

புகையிரத நிலைய அதிபர் III ஆம் தரத்திற்கான சம்பள அளவுத்திட்டம் (அ.நி.சு. 10/2025)

ரூபா 57,810.00 – 5 x 890 - 5 x 1030 – 5 x 1300 – 10 x 1340 – 93810.00

05. (அ) **கல்வி தராதரம் :**

i. சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மற்றும் கணிதம் மற்றும் மேலும் இரு விடயங்களில் திறமை சித்தியுடன் ஒரு தடவையில் ஆறு விடயங்களில் கா.பொ.த. (சா/ தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

உடன்

ii. க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் மூன்று விடயங்களில் (03) ( பொது பரீட்சை தவிர்ந்த) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். ( பழைய பாடத்திட்டத்தின் படி 03 விடயங்களில் சித்தியடைந்திருத்தல்)

(ஆ) **உடல்சார் தகைமைகள் :**

i. சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய உடற்சார் தகுதியை சகல வழிகளிலும் பெற்றிருத்தல் வேண்டும்.
ii. பதவியின் கடமையை மேற்கொள்வதற்கு போதுமானளவு உடல் உள தகுதியை பெற்றிருத்தல் வேண்டும்.
iii. உயரம் 05 அடி 04 அங்குலம் மற்றும் நெஞ்சளவு 32 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும்.
iv. 6x6 அளவுள்ள கண் பார்வையை கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) **வேறு தராதரம் :**

i. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடைத்தையை கொண்டிருத்தல் வேண்டும்.
iii. ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.
**குறிப்பு** : இவ் அறிவித்தலை வர்த்தமானியில் பிரசித்தப்படுத்தும் திகதியன்று சகல தராதரங்களையும் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

06. **ஆட்சேர்ப்பு முறை** :

மேலுள்ள (05) இல் குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களை பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகளுக்காக திறந்த எழுத்து மூல போட்டிப் பரீட்சை நடாத்தி பெற்றுக் கொள்ளும் திறமைகளின் வரிசைப் படி ஆட்சேர்ப்பு செய்யப்படும். விண்ணப்பம் கோரப்படும் சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிடங்கள் மாத்திரம் நிரப்பப்படுவதுடன் காத்திருப்போர் இடாப்பில் வைத்து ஆட்சேர்ப்பு செய்யப்பட மாட்டாது.

07. **ஆட்சேர்ப்பு பரீட்சையின் பரீட்சைத் திட்டம்** :

i. இப் பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.
ii. பரீட்சை முறை :

(அ) பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்படும் :
(ஆ) சகல கேள்வித் தாள்களுக்கும் மேற் கூறப்பட்ட (5) இன் கீழ் தராதரத்தை பெற்ற மொழி மூலமாகும். விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்பு மாற்ற இடமளிக்கப்படமாட்டாது.

iii. பரீட்சை விடயங்கள் :

(அ) மொழித் திறன் ;
(ஆ) நுண்ணறிவு பரீட்சை.

iv. விடய உள்ளடக்கம் :

01. **மொழித் திறன்**

காலம் 1½ மணியாகும். புள்ளி 100 ஆகும்.
இக் கேள்வித் தாள் இரு பகுதி;களை கொண்டதாகும்.சகல கேள்விகளுக்கும் விடையளித்தல் வேண்டும்.

01. II ம் பகுதி

மொழி பற்றிய விண்ணப்பதாரியின் புரிந்து கொள்ளலையும் மொழிநடை சம்பந்தமான அறிவையும் பரீட்சிக்கும் வகையில் அமையப் பெற்றதாக இரண்டாம் பகுதி அமையப் பெற்றிருக்கும்.

02. நுண்ணறிவு பரீட்சை காலம் 01 மணி புள்ளி 100 ஆகும்.

விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான விவரத்தையும் தெளிவுபடுத்தும் ஆற்றலையும் மற்றும் சரியான முறையில் நிகழ்வு சம்பந்தமான முடிவுகளுக்கு வரும் ஆற்றலையும் அளவிடும் வகையில் நோக்கமாக கொண்டதாக இக் கேள்வித்தாள் அமையப் பெற்றிருக்கும். இது பல்தேர்வு கேள்விகளை கொண்டதுடன் சகல கேள்விகளுக்கும் விடையளித்தல் வேண்டும்.

v. **தேர்வு முறை** :

ஒவ்வொரு வியடத்திலும் 50% வீத அல்லது அதற்கு கூடுதலான புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரிகள் பரீட்சையில் சித்தி பெற்றவர்களாக கருதப்படுவதுடன், இப் பரீட்சையில் இரு விடயங்களிலும் கூடுதலான புள்ளிகளை பெற்று சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தராதரங்கள் பரீட்சிக்கப்படும். இந் நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் ஏதும் வழங்கப்படமாட்டாது. விண்ணப்பம் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிடங்களின் படி புகையிரத நிலைய அதிபர் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவார்கள். நியமிப்பு செய்வதற்காக விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவது மேலுள்ள 06 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் படி பரீட்சையில் கூடிய புள்ளிகளை பெற்ற திறமையின் வரிசைப்படியாகும்.

08. **விண்ணப்பப்படிவத்தை தயாரிப்பதற்கும் பூரணப்படுத்துவதற்குமான உபதேசம்** :

i. விண்ணப்பப்படிவத்தை ஏ 4 ( தட்டச்சு கடதாசி) அளவுள்ள கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும். (விண்ணப்பப்படிவத்தை தமது கையெழுத்தினால் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.)

விண்ணப்பப்படிவத்தில் -

1 ஆம் பக்கத்தில் இலக்கம் 01 இலிருந்து 05 வரையிலான விடயங்களும்
2 ஆம் பக்கத்தில் இலக்கம் 06 இலிருந்து 09 வரையிலான விடயங்களும்
3 ஆம் பக்கத்தில் இலக்கம் 10 இலிருந்து 11 வரையிலான விடயங்களும்
4 ஆம் பக்கத்தில் இலக்கம் 12 இலிருந்து 13 வரையிலான விடயங்களும் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் மற்றும் திணைக்கள/நிறுவன பிரதானியின் உறுதிப்படுத்துகையும் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதற்ற மற்றும் பூரணமற்ற முறையில் தகவல்கள் உள்ளடக்கப் பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தின் புகைப்படப் பிரதியை தம்மிடம் வைத்துக் கொள்ளல் பிரயோசனமுடையதாக இருக்கும். மேலும் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலின் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாவென விண்ணப்பதாரி அறிந்து கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

ii. இப்பரீட்சைக்கான பரீட்சை கட்டணம் ரூபா 1200.00 ஆகும். அது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமான தலைப்பு 20-03-02-13 க்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எப்பாகத்திலேனும் அமைந்துள்ள தபால்/உப தபால் காரியாலயத்துக்கு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை அதன் ஒரு ஓரத்தை விண்ணப்பத்திரத்தின் குறித்த இடத்தில் ஒட்டவும். இப் பற்றுச் சீட்டின் புகைப்படப் பிரதியை முன் வைத்தல் அல்லது வேறு முறைகளில் பரீட்சை கட்டணம் செலுத்தப்படல் விண்ணப்பத்திரம் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாக அமையும். மேலும் பரீட்சை கட்டணம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் புகைப்பட பிரதியை தம்மிடம் வைத்துக் கொள்ளல் பிரயோசனமுடையதாக இருக்கும்.

iii. விண்ணப்பப்பத்திரத்தையிட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர் தரத்தின் III ஆம் வகுப்புக்கு ஆட்சேர்ப்பு செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை – 2025” எனவும் நீர் பரீட்சைக்கு தோற்றும் நகரத்தையும் நகர இலக்கத்தையும் குறிப்பிடவும்.

iv. **வெளி விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவத்தில் கையொப்பத்தை உறுதி செய்தல் :**

அரசாங்க பாடசாலையின் அதிபர்,சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தரிசு, முப்படைகளின் அதிகாரமுடைய உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் அரசாங்க சேவையில் பதவி நிலை தரத்தை உடைய உத்தியோகத்தர் ஒருவரால் மேற் கொள்ளப்பட வேண்டும்.

v. தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தை கிட்டிய சேவை நிலைய பிரதானியினால் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். இவர்களின் விண்ணப்பங்கள் கட்டாயமாக திணைக்கள பிரதானி ஊடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

vi. வர்த்தமாணி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற முடிவின் படி விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் தினம் அல்லது அத்தினத்திற்கு முன்பு குறித்த பரீட்சையின் பரீட்சை கட்டணத்தை செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டுடன் சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை முன் வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பி வைக்கப்படும். விண்ணதாரிகளுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பி வைக்கப்பட்டதும் அது பற்றிய அறித்தலொன்று இலங்கை பரீட்சைகள் திணைக்கத்தின் வலயத்தளத்தில் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களுக்குள் பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாத விடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள படி அது பற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உம்மிடம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்பத்திரத்தின் பிரதியையும் பரீட்சை கட்டணம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டின் பிரதியையும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், உமது முழுப் பெயர், முகவரி மற்றும் தேசிய ஆளடையாள அட்டை இலக்கத்தையும் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சை திணைக்களத்துடன் கேட்டறியுமாறு தெரிவிப்பதுடன் கொழும்பிற்கு வெளியிலான விண்ணப்பதாரியாயின் மேற்குறிப்பிட்ட உமது விபரம் உள்ளடக்கப்பட்ட வேண்டுகோள் கடிதத்தை இலங்கைப் பரீட்சை திணைக்களத்திற்கு மின்னஞ்சல் மூலம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விசாரித்தறிதல் ஏற்புடையதாக இருக்கும்.

vii. நுழைவுச்சீட்டு கிடைக்கப் பெற்றவுடனே பரீட்சித்துப் பார்த்து பெயர் மாற்றம் ஏதும் காணப்படின் பரீட்சை திணைக்களத்திற்கு அழைப்பினை மேற்கொண்டு விண்ணப்பத்திற்கமைய ஏற்புடைய பெயர் மாற்றத்தினை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பரீட்சைமண்டபத்தில் பெயர் மாற்றம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

viii. பரீட்சை விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்பு தமது பரீட்சை அனுமதிப் பத்திரத்தை உறுதிப் படுத்திக் கொள்ளல் வேண்டும். பரீட்சைக்கு தோற்றும் முதல் நாளன்று அதை பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய பரீட்சை அனுமதி பத்திரத்தை முன் வைத்தல் வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து பரீட்சைக்கு தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

ix. பரீட்சை விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு விடயங்களிலும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்கான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள எந்த ஆவணமும் ஏற்றுக் கொள்ளப்படும்.

i. தேசிய ஆளடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;
iii. செல்வுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

அதே போன்று பரீட்சை விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் முகம், மின் தொடர்பாடல், அணிந்து கொள்ளவில்லை என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் இரு காதுகளும் திறந்த நிலையில் பரீட்சை நிலையத்துக்கு வரல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தலை நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்கு உட் செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது. மேலும் பரீட்சை மண்டபத்திற்கு உட் சென்ற சந்தர்ப்பத்திலிருந்து பரீட்சை முடிந்து வெளியேறும் வரை முகம் மற்றும் இரு காதுகளும் திறந்த நிலையில் இருத்தல் வேண்டும்.

x. விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கோ அல்லது பதவிக்கான தராதரத்தை பெற்றுள்ளதாகவோ கருதப்பட மாட்டாது.

xi. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளரினால் இடப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்பட்டவர்களாகும். அச்சட்ட திட்டங்களை மீறும் சந்தர்பங்களில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டணைகளுக்கு உட்பட வேண்டி நேரிடும். வர்த்தமானி அறிவித்தலின் 7.v பந்தியின் படி எழுத்து மூல பரீட்சையில் தராதரங்களை பூரணப்படுத்தும் விண்ணப்பதாரிகளின் முழுப் புள்ளிகளின் திறமையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணம் புகையிரத பொது முகாமையாளளுக்கு வழங்கப்படும். பெறுபேறு ஆவணத்தில் உள்ளடக்கப்படும் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் தொகையினையும் நிலவும் வெற்றிடங்களின் தொகையினையும் புகையிரத பொது முகாமையாளரின் வேண்டுகோளின் படி தீர்மானிக்கப்படும். பரீட்சைக்கு தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட முறையில் அல்லது பரீட்சை திணைக்களத்தின் www.results.exam.gov.lk எனும் வலைத்தளத்தில் பிரசித்தப்படுத்தல் பரீட்சைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.

09. **சேவை நிபந்தனை** :

புகையிரத நிலைய அதிபர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யும் உத்தியோகத்தர்கள் 03 வருட தகுதிகான் காலவெல்லைக்கு உட்பட வேண்டும்.புகையிரத நிலைய அதிபர் III ஆம் தரத்திற்கு நியமித்த திகதியிலிருந்து 03 வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடையதல் வேண்டும். தகுதிகான் காலவெல்லைக்குள் புகையிரத பயிற்சி பாடசாலையில் 06 மாத கால புகையிரத நிலைய அதிபர்களுக்கான கோட்பாட்டு மற்றும் தொழில் பற்றிய பயிற்சிகள் வழங்கப்படும். பயிற்சியின் இறுதியில் புகையிரத பொது முகாமையாளரினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

10. **சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனை** :

i. இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்தையதுமாகும். தற்போது விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்தின் நிதியத்திற்கு சம்பந்தப்பட்டிருப்பின் தொடர்ந்தும் அதற்கான தொகை செலுத்த வேண்டுமாகும்.

ii. அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 18/2020 இன் ஏற்பாடுகளின் படி அரசாங்க சேவைக்கு இணைந்து கொண்ட மொழி மூலத்திற்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

iii. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் தாபன விதிக் கோவை மற்றும் நிதிப் பிரமாண ஏற்பாடுகளுக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள தாபன செயல் திட்டத்தின் நியதிகள் கோவையின் நியதிகளுக்கு கீழ்ப்பட்டு செயற்பட வேண்டியதுடன், அதே போன்று சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அரசினால் வெளியிடப்படும் சட்டதிட்டங்களுக்கும் திணைக்கள உபதேசங்களுக்கும் கீழ்ப்பட்டு செயற்பட வேண்டும்.

11. சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலம் வெளியிடப்படும் இவ் அறிவித்தலின் கருத்துகளுக்கிடையில் ஏதேனும் பொருந்தா தன்மை அல்லது வேறுபாடு உள்ளதாக தெரியவருமிடத்து அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழிமூல அறிவித்தலின் படி நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

ஜே. ஐ. டி. ஜயசுந்தர,
புகையிரத பொது முகாமையாளர்.

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
கொழும்பு 10,
2025.06.06.

(ஏ4 கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்பு விண்ணப்பக்கோரல் அறிவித்தலை நன்றாக வாசித்து புரிந்து கொள்ளல் வேண்டும்.)

மாதிரி விண்ணப்பப் படிவம்

காரியால பிரயோசனத்திற்காக

| |
|---|
| பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம்<br>சிங்களம் - 2<br>தமிழ் - 3<br>(குறித்த இலக்கத்தை அடைப்புக்குள் எழுதவும்) |
| பிரசா உரிமை<br>பரம்பரை மூலம் -1<br>பதிவு மூலம் -2<br>(குறித்த இலக்கத்தை அடைப்புக்குள் எழுதவும்) |

| *பரீட்சைக்கு தோற்ற விண்ணப்பிக்கும் நகரம்* | *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|---|
| 1 வது விருப்பம் | | |
| 2 வது விருப்பம் | | |

**இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை 2025**

## Open Competitive Examination For Recruitment to The Post Of Station Master Grade - III in Sri lanka Railway Department – 2025

01. முழுப் பெயர் :
    i. சிங்களத்தில்/தமிழில் :…………………………………………………………………………………
    ii. ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் :……………………………………………………………………..
    (உதாரணம்: HEARATH MUDIYANSELAGE PIYAL SILVA)

02. நிரந்தர முகவரி :
    i. சிங்களத்தில்/தமிழில் :…………………………………………………………………………………
    ii. ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் :……………………………………………………………………..

03. தொலைபேசி இலக்கம் :
    i. கையடக்க தொலைபேசி :
    ii. அலுவலக தொலைபேசி இலக்கம் :

04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

05. ஆண்/பெண் தன்மை
    பெண் - 1
    ஆண் - 0 (குறித்த இலக்கத்தை அடைப்புக்கள் எழுதவும்)

06. இனத் தொகுதி
    சிங்களம் - 1/இலங்கை தமிழ்- 2/இந்திய தமிழ் - 3
    முஸ்லிம் - 4/பறங்கியர் - 5 /மலாயர் - 5 /வேறு – 6 (குறித்த இலக்கத்தை அடைப்புக்குள் எழுதவும்)

07. வதிவிடம் :
   i. கிராம அலுவலர் பிரிவு: …………………………. அதன் இலக்கம் ☐
   ii. பிரதேச செயலாளர் பிரிவு ………………………………………………
   iii. மாவட்டம் : ………………………………………………………………

08. பிறந்த திகதி : வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

2025.07.14 ஆம் திகதியன்று வயது: வருடங்கள்: ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள்: ☐☐

09. தற்போது கடமை புரியும் திணைக்களம்/நிறுவனம் :…………………………………………………..

10. கல்வி தராதரம் :

i. க.பொ.த (சா/தரம்)
சுட்டெண் : ……………………… வருடம் :……………………

| *தொ.இல.* | *பாடம்* | *பெறுபேறு* | *தொ.இல.* | *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|---|---|---|---|
| i | | | vi | | |
| ii | | | vii | | |
| iii | | | viii | | |
| iv | | | ix | | |
| v | | | x | | |

ii. i.க.பொ.த. (உயர் தரம்)
சுட்டெண் : ……………………… வருடம் :……………………

| *தொ.இல.* | *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|---|
| i | | |
| ii | | |
| iii | | |
| iv | | |

11. நீர் எப்போதாவது ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? (குறித்த அடைப்புக்குள் "X" அடையாளத்தை இடவும்)

ஆம் ☐ இல்லை ☐

12. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்துகை :

(அ) இவ் விண்ணப்பத்தில் தன்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தனக்கு தெரிந்த வகையில் உண்மையானதும் சரியானதெனவும் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு ஏதேனும் பகுதி பூரணப்படுத்தாததால் உடன்/ அல்லது பிழையான முறையில் உடன் / அல்லது பொய்யான முறையில் பூரணப்படுத்தி இருப்பின் தனது விண்ணப்ப தன்மை இரத்துச் செய்யப்படும் என்பதையும் பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்பு மேற் குறிப்பிட்ட விடயம் தெரியவருமிடத்து பதவிக்காக நியமிக்கப்பட்ட நியமனம் இரத்து செய்யப்படும் என்பதையும் நான் நன்றாக அறிவேன். அதன் விளைவையும் நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக் கொள்கிறேன்.

(ஆ) மேலுள்ள (அ) ல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பொய்யானதென தான் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்பு தெரியவருமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் கீழ்ப் படிவதாக தெரிவித்து கொள்கிறேன். அதன் விளைவையும் நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக் கொள்கிறேன்.

(இ) ………………………… ஆந் திகதி …………………………………. தபால் நிலையத்திற்கு ரூபா 1200.00 செலுத்தி பெற்றுக் கொண்ட இலக்கம் …………………………… உடைய பற்றுச் சீட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

| |
|---|
| பற்றுச் சீட்டின் ஒரு ஓரத்தை கழன்று விடாதவாறு இங்கு ஒட்டவும்.<br>( பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதியை தம்மிடம் வைத்துக் கொள்ளவும்) |

(ஈ) இப் பரீட்சையின் நிபந்தனைகளுக்கு கீழ்ப்பட்டு செயற் பட இணங்கிக் கொள்கிறேன்.

மேலும் பரீட்சை நடாத்ததல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் இடப்படும் சட்டதிட்டங்களுக்கும் கீழ்ப்படுவதாக தெரிவித்துக் கொள்கிறேன்.

…………………………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி …………………………

13. கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இவ் விண்ணபபத்தை முன் வைக்கும் திரு. ………………………………………… என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் அவர் ……………………. ஆந் திகதி மேலுள்ள கையொப்பத்தை தன் முன்னிலையில் இட்டார் எனவும் குறித்த பரீட்சை கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும் அப் பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் உறுதிப்படுத்துகிறேன்.

……………………………………..
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

திகதி : …………………

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் : …………………………………………..
பதவி : ……………………………………..
முகவரி : ………………………………………………………………………..
(தயவு செய்து உத்தியோக இலச்சிணையை பொறிக்கவும்)

14. திணைக்கள/நிறுவன தலைவரின் உறுதிப்படுத்துகை :

இவ் விண்ணப்பத்தை முன் வைத்துள்ள திரு. …………………………………….. என்பவர் ……………………………………….. திணைக்களத்தில்/நிறுவனத்தில் …………… ஆந் திகதியிலிருந்து ……………………… திகதி வரை ………………………….. ஆக சேவை செய்துள்ளார். அவருக்கு எதிராக முற்றுப் பெறாத ஒழுக்காற்று நடவடிக்கை உள்ளது/இல்லை. அவரின் வேலை, நடத்தை, வேலைக்கு சமூகம் தரல் திருப்பதிகரமானது/அதிருப்திகரமானது. குறித்த பரீட்சை கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும், அப் பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் அவர் புகையிரத திணைக்களத்தில் புகையிரத நிலைய அதிபர் III ஆம் தரத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுமிடத்து இத் திணைக்களத்திலிருந்து /நிறுவனத்திலிருந்து விடுவிக்க முடியும்/முடியாதென தெரிவித்துக் கொள்கிறேன். ( ஏற்புடையதற்ற வசனங்களை நீக்கி விடவும்)

…………………………………………………
திணைக்கள/நிறுவன தலைவரின் கையொப்பம்

திகதி : ………………..
உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் : …………………………………………..
பதவி : ……………………………………..
முகவரி : ………………………………………………………………………..
(தயவு செய்து உத்தியோக இலச்சிணையை பொறிக்கவும்)

06-105

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

**அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

இலங்கை விஞ்ஞான சேவையின் III ஆந் தரத்தின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான
திறந்த போட்டிப் பரீட்சை – 2025

இலங்கை விஞ்ஞான சேவையின் அனுமதிக்கப்பட்ட பதவிகள் நிலவும் அமைச்சு/திணைக்களங்களில் இலங்கை விஞ்ஞான சேவையின் III ஆம் தரத்தின் பதவிகளில் நிலவும் 95 வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்ளுவதற்கான போட்டிப் பரீட்சைக்கு தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பப் படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்னும் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்கள் நிகழ்நிலை (Online) முறையினால் மட்டுமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்கள் 2025, யூன் மாதம் 16 ஆந் திகதி தொடக்கம் ஏற்றுக் கொள்ளல் ஆரம்பிக்கப்படும் என்பதுடன், 2025, யூலை மாதம் 11 ஆந் திகதி 21:00 மணிக்கு முடிவுறுத்தப்படும்.அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

01. இப்பரீட்சை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நியமனங்களின் கீழ், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2025 செத்தெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும். நாட்டில் ஏற்படக் கூடிய விசேட நிலைமையின் பேரில் மட்டும் பரீட்சை நாடு பூராகவும் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். எவ்வாறாயினும், ஏதேனுமொரு பரீட்சை நிலையத்திற்கு எண்ணிக்கையில் போதுமானளவு விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் அந்நிலையத்திற்கு விருப்பம் தெரிவித்துள்ள விண்ணப்பதாரர்கள் வேறு பரீட்சை நிலையத்திற்கு முன்வைக்கப்படுவர். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நியமனங்களுக்கு உட்பட்டு இப்பரீட்சையை தள்ளிப் போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்குப் பரீட்சைகள் ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

இவ் அறிவித்தலில் "நியமன அதிகாரி" எனக் கருதப்படுவது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவாகும்.

02. **ஆட்சேர்ப்பு முறை: எழுத்து மூலப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளின் பேரில்**

எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த உரிய தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள பரீட்சார்த்திகள் புள்ளிகளின் திறமையின் தொடர் முறை மற்றும் விருப்பத்தையும் கருத்திற் கொண்டு ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்த்துக் கொள்ளும் பொருட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் எண்ணிக்கை தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2.1 **விருப்பத்தைக் குறிப்பிடல் :** ஒவ்வொரு பதவியின் பொருட்டு ஆட்சேர்த்துக் கொள்வதற்கு இருக்க வேண்டிய தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டிருப்பின், விண்ணப்பதாரரொருவருக்கு பல பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு வாய்ப்புக்கள் உண்டு. விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரிகளினால் ஒவ்வொரு பதவியின் பொருட்டும் தமது விருப்பங்களை தொடர் முறையில் விண்ணப்பத்தில் குறிப்பிடல் வேண்டும்.

**கருத்தில் கொள்ளவும்** : ஒரு பதவியை விடக் கூடிய பதவிகளின் பொருட்டு விண்ணப்பிக்கும் போது, விண்ணப்பதாரியினால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் விருப்பின் தொடர் முறையை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கபடமாட்டாது. விண்ணப்பதாரியினால் விருப்பம் குறிப்பிடப்படாதுள்ள பதவியின் பொருட்டு நியமனத்தைப் பெற்றுக் கொள்வதற்கு விடுக்கப்படும் வேண்டுகோள்கள் எக்காரணத்தின் பேரிலும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

2.2 **எழுத்து மூலப் பரீட்சை** : இப்போட்டிப் பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

| *வினாத்தாள்* | *காலம்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. பொது அறிவு வினாத்தாள் | 03 மணித்தியாலம் | 100 | 40 |

2.2.1 **பாடவிதானம் :**

| *வினாத்தாளின் பெயர்* | *பாடவிதானம்* |
|---|---|
| 1. நுண்ணறிவு | பரீட்சார்த்தியின் தர்க்கத்திறன், பொது அறிவு மற்றும் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் போன்ற விடயங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளும் பொருட்டு தயாரிக்கப்படும் இவ்வினாப்பத்திரம் 50 பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாகும். |
| 2. பொது அறிவு வினாத்தாள் | இலங்கையின் அரசியல், சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார சூழலும், தேசிய மற்றும் சர்வதேச ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த நவீன விடயங்களும், தேசிய மற்றும் சர்வதேச விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி தொடர்பான அறிவினைப் பரிசோதித்துப் பார்க்கும் பொருட்டு தயாரிக்கப்பட்ட பொது அறிவினை அளவீடு செய்யும் வினாத்தாளாகும். வினாத்தாள் இரு பகுதிகளைக் கொண்டது. முதலாவது பகுதி சுருக்க வினாக்களைக் கொண்டதாகும். 25 புள்ளிகள். இரண்டாவது பகுதி கட்டமைப்பு வினாக்களைக் கொண்டதாகும். 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். 75 புள்ளிகளாகும். |

2.3 **பொதுவான நேர்முகப்பரீட்சை** : தகைமைகள் மட்டும் பரீட்சித்துப் பார்க்கப்படும் என்பதுடன் புள்ளிகள் வழங்கப்படுவதில்லை.

எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில், ஒவ்வொரு வினாப்பத்திரத்தின் பொருட்டு 40% அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் புள்ளிகளின் திறமையின் தொடர் முறைக்கமைய நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு, தகைமைகள் உறுதிப்படுத்தும் விண்ணப்பதாரர்கள் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் பொருட்டு மட்டும் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர். நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படும் எண்ணிக்கை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் என்பதுடன், விண்ணப்பதாரர்களின் தகைமைகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் நேர்முகப்பரீட்சை சபையினால் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

2.4 ஒவ்வொரு பதவிகளுக்கும் ஏற்புடையதானவாறு விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பு மற்றும் எழுத்து மூலப் பரீட்சையின் புள்ளிகளின் மொத்தத்தின் திறமையின் தொடர் முறையின் அடிப்படையில் ஒவ்வொரு பதவிகளின் பொருட்டு நியமனம் செய்யப்படும்.

திறமையின் தொடர் முறைக்கமைய வெற்றிடங்களை நிரப்பும் போது, ஏதேனுமாரு சந்தர்ப்பத்தில் மிகுதியாவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குக் கூடுதலான எண்ணிக்கையில் சமமான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள, தகைமையுடைய பரீட்சார்த்திகள் இருப்பின் மற்றும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கான சேவைகளின் தேவைப்பாடு அச்சந்தர்ப்பத்தின் போது நிலவுமாயின், அவ்வாறு சம புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள பரீட்சார்த்திகளில் அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொண்டவர்களிடையே இருந்து அதிகமானவர்களைத் தெரிவு செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படலாம். இத்தெரிவு நடைமுறை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும்.

I. பரீட்சார்த்திகளின் ஆற்றலை மதிப்பிடலின் பொருட்டான எழுத்து மூலப் பரீட்சை;
II. திறமையின் அடிப்படையிலான நேர்முகப் பரீட்சை.

எழுத்து மூலப் பரீட்சை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் நிறுவனமொன்றின் மூலம் நடாத்தப்படும்.

நேர்முகப்பரீட்சை சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

இத்தெரிவு நடைமுறையின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் தொடர்பான மேலதிகத் தகவல்கள் www. psc.gov.lk என்னும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இணையப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

முதற் பக்கம் → பதிவிறக்கம் → நடைமுறை → விசேட தெரிவு நடைமுறை

2.5 ஒவ்வொரு பதவியின் பொருட்டு நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். உரிய பதவியின் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்றவாறு பெற்றுக் கொண்டுள்ள புள்ளிகளின் தொடர் முறை மற்றும் வழங்கப்பட்டுள்ள விருப்பு என்பன கண்டிப்புடன் அவதானம் செலுத்தப்பட்டு நியமனம் மேற்கொள்ளப்படும். ஏதேனும் பதவியொன்றில் சகல வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அல்லது நிரப்பாது விடுவதற்கு அல்லது வெற்றிடங்களின் பகுதியொன்றை நிரப்புவதற்கு நிரப்பாது விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

03. **வெற்றிடங்களின் எண்ணிக்கை** : 95

வெற்றிடமாகவுள்ள பதவிகளின் எண்ணிக்கை அப்பதவிகளுக்குரிய அமைச்சு / திணைக்களங்களுக்கமைய மேலும் ஒதுக்கப்பட்டுள்ள முறைகள் தொடர்பாக இவ் அறிவித்தலின் 6.2.2 இன் கல்வித் தகைமைகளின் கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

04. **ஆட்சேர்ப்பின் பொது நிபந்தனைகள்**:

4.1. அரசாங்க சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், 1877/27 என்னும் இலக்கமுடைய 2014.08.28 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைகள் பிரமாணக் குறிப்பின் விதிமுறைகளுக்கும், ஏற்புடையவாறு திணைக்களத்தின் ஒழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கும், 2310/29 என்னும் இலக்கமுடைய 14.12.2022 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், (இதன் பின்னர் செயற்பாட்டு நடைமுறை விதி என அறிமுகப்படுத்தப்படும்), ஒவ்வொரு பதவிகளுக்கும் உரிய அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விதிகளுக்கும் மேற்படி நியமங்கள், நிபந்தனைகள், ஒழுங்குவிதிகள், ஏற்பாடுகள், விதிமுறைகளுக்கு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் மேற்கொள்ளப்படக் கூடிய திருத்தங்களுக்கும் உட்பட்டு தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் உரிய பதவியின் III ஆம் வகுப்பிற்கு நியமிக்கப்படுவர்.

4.2. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உடையதுமாகும். ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு விண்ணப்பதாரர் இணங்கியொழுகுதல் வேண்டும். விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் முறையில் தங்களினால் அதன் பொருட்டு பங்களிப்புப் பணம் செலுத்துதல் வேண்டும்.

4.3. இந்நியமனம் மூன்று வருட காலத்திற்குத் தகுதிகூர் காலத்திற்கு உட்பட்டதாகும். சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டு மூன்று வருட காலத்திற்குள் சேவைகள் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

4.4. 18/2020 என்னும் இலக்கமுடைய அரசாங்க நிர்வாகச் சுற்றுநிருபத்திற்கமையப் பதவிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டு மூன்று வருட காலத்திற்குள் விதித்துரைக்கப்பட்ட அரச கரும மொழி/ அரச கரும மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

4.5. நியமனம் பெறுவர் நாட்டினுள் நியமிக்கப்படும் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

4.6. தமக்கு வழங்கப்படும் பதவியின் கடமைகளை விதித்துரைக்கப்பட்ட திகதியில் பாரமேற்பதற்கு தவறும் மற்றும்/அல்லது நியமிக்கப்பட்டுள்ள பதவியின் அல்லது நியமிக்கப்படும் பிரதேசத்தில் கடமையைப் பாரமேற்பதை நிராகரிக்கும் அல்லது தவிர்க்கும் விண்ணப்பதாரர்களின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

05. சம்பளக் கட்டமைப்பு மற்றும் மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் : 25.03.2025 ஆந் திகதிய 10/2025 என்னும் இலக்கமுடைய அரசாங்க நிர்வாகச் சுற்றுநிருபத்தின் அட்டவணை II இற்கமைய, இப்பதவிகளுக்குரிய மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 82150 - 10x 2400 - 8 x 2940 – 17 x 3900 – ரூபா 195970.00 (SL–1–2025) ஆகும். மேற்கூறப்பட்ட சம்பளம் 01.01.2027 தொடக்கம் அமுல்படுத்தப்படும். அதுவரையில் மேற்படி சுற்றுநிருபத்தின் அட்டவணை III இன் படி சம்பளம் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் செலுத்தப்படும் படிகளும் உரித்தாகும்.

06. **ஆட்சேர்ப்பு தகைமைகள் :**

6.1 பொதுவான தகைமைகள் :

i. இலங்கைப் பிரசையாகவிருத்தல்.

ii. சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல்

iii. இலங்கையினுள் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குப் போன்று தமது பதவியின் வகிபாகம் மற்றும் கடமைப் பணிகளை நன்றாக நிறைவேற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதியடையவராகவிருத்தல்.

iv. ஆட்சேர்ப்பின் பொருட்டு தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் திகதி அல்லது அதற்கு முன்னர் சகல விதத்திலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

v. எந்தவொரு மதத்திலும் மதப் பதவியை வகிப்பவராக இல்லாதிருத்தல்.

6.2 **கல்வி/தொழில்சார் தகைமைகள் மற்றும் வயதெல்லை :**

6.2.1 **வயதெல்லை**: விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் திகதிக்கு இருபத்திரெண்டு (22) வயதுக்குக் குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், முப்பதைந்து (35) வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். அதற்கமைய 13.06.1990 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 13.06.2003 ஆந் திகதிக்கு அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதி உள்ளவர்களுக்கு மட்டும் இதன் பொருட்டு விண்ணப்பிப்பதற்குத் தகைமைகள் உண்டு.

6.2.2 **கல்வித் தகைமைகள் :**

| *தொ. இலக்கம்* | *அமைச்சு/ திணைக்களம்* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|---|---|---|
| 01 | தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் | 05 | பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து,<br><br>(அ) வகுப்புச் சித்தியுடன் விவசாயம் அல்லது தாவரவியல் அல்லது தாவர விஞ்ஞானம் தாவர உயிர் தொழில்நுட்பம் அல்லது விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத் துவம் அல்லது விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் அல்லது விவசாய வியாபார முகாமைத்துவம் அல்லது விவசாய வளங்கள் முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான விஞ்ஞானமானி நான்கு (04) வருட சிறப்புக் கௌரவப் பட்டத்தைப் பெற்றிருத்தல்<br><br>அல்லது |

| *தொ. இலக்கம்* | *அமைச்சு/ திணைக்களம்* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|---|---|---|
| | | | | (ஆ) தாவரவியல் அல்லது விவசாயம் அல்லது தாவரவியல் அல்லது தாவர உயிர் தொழில்நுட்பம் அல்லது விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் அல்லது விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் அல்லது விவசாய வியாபார முகாமைத்துவம் அல்லது விவசாய வளங்கள் முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப் பின் படிப்பு நான்கு (04) வருட சிறப்பு/ கௌரவப் பட்டத்துடன்,<br><br>சூழலியல் அல்லது வனவியல் அல்லது தாவர பன்முகத்தன்மை அல்லது பல்லுயிர் மற்றும் பாதுகாப்பு அல்லது தோட்டக்கலை) Horticulture (அல்லது நில அமைப்பு) Landscaping (அல்லது தாவர உயிர் தொழில்நுட்பம் அல்லது விவசாயம் அல்லது தாவரப் பாதுகாப்பு துறைகளில் ஏதேனும் ஒன்றில் முதுகலை பட்டம் பெற்றிருத்தல்,<br>அல்லது<br>(இ) தாவரவியல் அல்லது உயிரியல் அல்லது விவசாயம் அல்லது தாவர அறிவியல் அல்லது தாவர உயிர் தொழில்நுட்பம் அல்லது விவசாயத் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் அல்லது விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் அல்லது விவசாய வியாபார முகாமைத்துவம் அல்லது விவசாய வளங்கள் முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றைப் பாடமாகக் கொண்டு உள்ளடக்கிய இளங்கலை பொதுப் பட்டத்துடன்,<br><br>சூழலியல் அல்லது வனவியல் அல்லது தாவர பன்முகத்தன்மை அல்லது பல்லுயிர் மற்றும் பாதுகாப்பு அல்லது தோட்டக்கலை) Horticulture (அல்லது நில அமைப்பு) Landscaping (அல்லது தாவர உயிர் தொழில்நுட்பம் அல்லது விவசாயம் அல்லது தாவரப் பாதுகாப்பு என்பனவற்றில் ஒரு துறைக்குரியதாக முதுகலை பட்டம் பெற்றிருத்தல் |

| *தொ. இலக்கம்* | *அமைச்சு/ திணைக்களம்* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|---|---|---|
| 02 | தேசிய மிருகக் காட்சிச்சாலைத் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் | 02 | பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து,<br><br>(அ) வகுப்புச் சித்தியுடன் விலங்கியல் அல்லது உயிரியல் அல்லது பயன்பாட்டு உயிரியல் அல்லது பயன்பாட்டு விலங்கியல் அல்லது கால்நடை பராமரிப்பு அல்லது நீரியல் வளங்கள் முகாமைத்துவம் அல்லது விலங்கியல் மற்றும் மீனியல் அல்லது விவசாயம் அல்லது விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் அல்லது விவசாய வளங்கள் முகாமைத் துவம் மற்றும் தொழில்நுட்பம் அல்லது விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத் துவம் தொடர்பாக நான்கு (04) வருட இளங்கலை சிறப்பு/ கௌரவ BSc. Special/ Honours பட்டம் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>(ஆ) விலங்கியல் அல்லது உயிரியல் அல்லது பயன்பாட்டு உயிரியல் அல்லது பயன்பாட்டு விலங்கியல் அல்லது கால்நடை பராமரிப்பு அல்லது நீரியல் வளங்கள் முகாமைத்துவம் அல்லது விலங்கியல் மற்றும் மீனியல் அல்லது விவசாயம் அல்லது விவசாய தொழில் நுட்பம் மற்றும் முகாமைத்துவம் அல்லது விவசாய வளங்கள் முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் அல்லது விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக நான்கு (04) வருட சிறப்பு/ கௌரவ BSc. Special/ Honours பட்டத்துடன்,<br><br>விலங்கியல் அல்லது உயிரியல் அல்லது பயன்பாட்டு உயிரியல் அல்லது பயன்பாட்டு விலங்கியல் அல்லது கால்நடை பராமரிப்பு அல்லது நீரியல் வளங்கள் முகாமைத்துவம் அல்லது விலங்கியல் மற்றும் மீனியல் அல்லது விவசாயம் அல்லது விவசாய தொழில் நுட்பம் மற்றும் முகாமைத்துவம் அல்லது விவசாய வளங்கள் முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் அல்லது விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றில் ஒரு துறைக்குரியதாக பட்டப் பின் படிப்பு பட்டத்தைப் பெற்றிருத்தல்.<br><br>அல்லது |

| *தொ. இலக்கம்* | *அமைச்சு/ திணைக்களம்* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|---|---|---|
| | | | | (இ) விலங்கியல் அல்லது உயிரியல் அல்லது பயன்பாட்டு உயிரியல் அல்லது பயன் பாட்டு விலங்கியல் அல்லது கால்நடை பராமரிப்பு அல்லது நீரியல் வளங்கள் முகாமைத்துவம் அல்லது விலங்கியல் மற்றும் மீனியல் ஆகியவற்றை ஒரு பாடமாகக் கொண்டு உள்ளடக்கிய பொதுப்) BSc. General Degree (பட்டத் துடன்,<br><br>விலங்கியல் அல்லது உயிரியல் அல்லது பயன்பாட்டு உயிரியல் அல்லது பயன்பாட்டு விலங்கியல் அல்லது கால்நடை பராமரிப்பு அல்லது நீரியல் வளங்கள் முகாமைத்துவம் அல்லது விலங்கியல் மற்றும் மீனியல் அல்லது விவசாயம் அல்லது விவசாய தொழில் நுட்பம் மற்றும் முகாமைத்துவம் அல்லது விவசாய வளங்கள் முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் அல்லது விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றில் ஒரு துறைக்குரியதாக பட்டப் பின் படிப்பு பட்டத்தைப் பெற்றிருத்தல். |
